பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 02 சனிக்கிழமை (16-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 187

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-2052)

## புலிகளின் தாக்குதலில் மூன்று படையினர் பலி

(மட்டக்களப்பு)

பொலநறுவை அருங்களவுலப் பிரதேசத்தில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அருங்களவுல இராணுவ முகாமிலிருந்து அப்பகுதிகாடுகளில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கச்சென்ற இராணுவ அணிமீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும்தெரியவருகிறது. (இ)

## வடக்கு - கிழக்கு டாக்டர்களின் வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவு

### 6 மாதத்திற்கு விசேட கொடுப்பனவு வழங்க இணக்கம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு வைத்தியர்கள் தமக்கும் விசேட மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டுமெனக் கோரி நடத்திய வேலை நிறுத்தப்போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு வைத்தியர்கள் குழு நேற்று நண்பகல் சுகாதர அமைச்சர் டபிள்யு ஜே. செனவிரத்தினவுடன் சந்தித்து நடத்திய பேச்சுக்களையடுத்தே:வேலை நிறுத்த போராட்டத்தை வைத்தியர்கள் கைவிட்டுள்ளனர். [8ம் பக்கம் பார்க்க]

★ சமாதானக் கதவு எந்நேரமும் திறந்திருக்காது

# பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகளுக்கு பிரதமர் அழைப்பு!

## கடும் போக்கு கலைகிறது

(நமது நிருபர்)

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதானக் கதவுகள் இப்போது திறந்துள்ளது.**

**பேச்சு வார்த்தைக்கான கதவுகள் என்நேரமும் திறந்திருக்கப் போவதில்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.**

இளைஞர் விவகார அமைச்சுக்கான புதிய கட்டடமொன்றை நேற்று கொழும்பு பௌத்த லோகமாவத்தவில் திறந்து வைத்துப் பேசும் போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காமேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இணைவதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. சமாதானப் பேச்சுக்கான கால அவகாசம் இன்னமும் இருக்கிறது. இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து சாதகமான பதில கிடைக்குமா? என்று அரசாங்கம் எதிர்பார்த்த வண்ணம் உள்ளது

அரசுக்கும் தமிழீழ விடுத (8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரில் குண்டு வெடிப்பு

### பொதுமகன் ஒருவர் பலி!

[திருகோணமலை]

திருகோணமலை நகரின் மையப்பகுதியில் நேற்றிரவு 8.00 மணியளவில் பொலிஸ் காவலரணுக் கருகில் குண்டொன்று வெடித்துள்ளது.

இக்குண்டுத்தாக்குதலினால்பொலிசாருசக்குஎவ்வித சேதமும் ஏற்படவில்லையென்றுதெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார்

இவரது சடலம் திருமலை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுளளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் சுவரொட்டிகள்

[வடமராட்சி கிழக்கு]

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர வேண்டாமென விடுதலைப் புலிகளின்பெயரிலானகோரும்

(8-ம் பக்கம் பார்க்க)

காணாமல் போனவர்களை

## தேடிக் கண்டுபிடிக்க தேடுதல்அலுவலர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் புதிய தேடுதல அலுவலர்களை நியமிக்கவுள்ளது.

முல்லைதீவு, கிளிநொச்சி வவுனியாமாவட்டத்திலேயே குறித்த தேடுதல் அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய இலங்கை செஞ்சிலுவை தேடுதல் சங்கத்தலைவராக என். சந்திரசேகரம்பிள்ளையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நியமித்துள்ளது.

இச்குழுவில் 8பேர் அடங்கியுள்ளதாகவும் இத்தேடுதல் குழுவிற்கான நிதியை செஞ்சிலுவை சர்வதேசக் குழு வழங்கும் என்றும் வடக்கு கிழக்கு செஞ்சிலுவைச் சங்க அதிகாரி எஸ். தர்மரத்தினம் தெரிவித்தார். (உ-7)

## ஜனாதிபதி - ரவூப்ஹக்கீம் சந்திப்பு முடிவு எதுவும் எட்டப்படவில்லை

[கொழும்பு]

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவுக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்குமிடையில் நேற்று இரவு நடைபெற்ற பேச்சுவார்த்தை எதுவித இணக்கமும் இன்றி முடிவுற்றதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலம்புரிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கையில்,

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கைகளையும் முஸ்லிம் மக்களின் உள்ளக்

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகள் நமது நாட்டின் ஓர் அமைப்பே

### அமைச்சர் செனிவிரட்ன தெரிவிப்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளும் எமது நாட்டின் ஒரு அமைப்புதான். விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திற்குச் செலவிடும் கோடிக்கணக்கான பணமும் எமது நாட்டின் பணமதான்.

யுத்தத்திற்காகச் செலவிடும் பணம் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே போகிறது. எனவே இந்தக் கொடிய யுத்தத்திற்குத்தீர்வு காணவேண்டும் என்று இன விவகார அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தின செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலுள்ள அமைப்பான விடுதலைப்புலிகளுடன் யுத்தம் செய்வதினால் எமது நாட்டுப் பணம் வீண்விரயம் செய்யப்பட்டு வருவதுடன் செலவும் அதிகரித்துக்கொண்டேபோகிறது.

1996ம் ஆண்டு 97 கோடி ரூபாவாக இருந்த யுத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பெயர் வல்லையில் பதிவு

(யாழ்ப்பாணம்)

வல்லைப்பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவாடியில் நேற்றுபிற்பகல் முதல் வடமராட்சி நோக்கிசென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் அடையாள அட்டைகள் படையினரால் பதிவு செய்யப்பட்டன.

குறித்தமாணவரின் முழுப்பெயர் கிராமஅலுவலர்பிரிவு பிறந்ததிகதி ஆகியவிபரங்கள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை பல்கலைக்கழகமாணவரென தம்மை இனம்காட்டிக் கொள்ளாதவர்கள் இப்பதிவுகளிலிருந்து தப்பிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொதுக் கூட்டம்

(திருநெல்வேலி)

வேலணை சேர்வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் இம்மாதம் 24ஆம்திகதி அதிபர்க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படிகூட்டத்தில்நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது.

(உ-127)

## பிஸ்ரல் குழு சுட்டதில் பொலிஸார் பலி

ஏறாவூர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த புதன் இரவு கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கான்ஸ்டபிள் விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவினரின் சூட்டுக்குப் பலியானார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-8)

## ஆண்டுவிழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டை உதய தாரகை சனசமூக நிலையத்தின் 11 வது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை 4 30 மணிக்கு நிலையத் தலைவர் வ. பாலச்சந்திரன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி விழாவையொட்டி அன்றைய தினம் சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளன; (உ-120)

## திருப்பணி துரிதகதியில்

(திருநெல்வேலி)

சுன்னாகம் ஸ்கந்தவரோதையாக் கல்லூரியிலுள்ள முருகன் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

கொழும்பிலுள்ள ஸ்கந்தவரோதையாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேற்படி திருப்பணி வேலைகளைப் பொறுப்பேற்று செயற்படுத்தி வருகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் குடமுழுக்கு விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (உ-127)

## இந்து மயானம் சீரில்லை

(ஈச்சமோட்டை)

வழுக்கையாறு இந்து பொதுமயானம் நீண்டகாலமாகத் திருத்தப்படாது சீர்கெட்டுக் காணப்படுவதால், அங்கு இறுதிக்கிரியைகளை ஆற்றச் செல்வோர் பெரும் சிரமங்களிற்கு ஆளாகின்றனர்; [உ-59]

## வெடிமருந்து மீட்கப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்கா பகுதியில், உள்ள ஆடம்பரக் ஹோட்டல் ஒன்றில் இருந்து பெருமளவு வெடிமருந்துகளும், துப்பாக்கி ரவைகளும் பொலிஸாரினால் கடந்த புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆடம்பரக் ஹோட்டல் விமான நிலையத்திற்கு மிக அருகில் உள்ளமை குறிப்பிடத்தக்கது;

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிங்கள இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்; (து)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

நேற்றைய தொடர்ச்சி

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 194514 சி | 1945ı4 டி |
| 194514 ஈ | 194514 எப் |
| 194590 ஏ | 194601 ஏ |
| 194601 பி | 194601 சி |
| 194601 டி | 19460ı ஈ |
| 194692 ஏ | 194692 பி |
| 194707 ஏ | 194707 பி |
| 194710 ஏ | 194710 பி |
| 194722 ஏ | 194722 பி |
| 194722 சி | 194784 ஏ |
| 194784 பி | 194793 ஏ |
| 194798 ஏ | 194806 ஏ |
| 196438 ஏ | 196487 ஏ |
| 196487 பி | 196487 சி |
| 196487 டி | 196500 ஏ |
| 196500 பி | 199500 சி |
| 196506 ஏ | 196540 ஏ |
| 196540 பி | 196575 ஏ |
| 196594 ஏ | 196608 ஏ |
| 196608 பி | 196608 சி |
| 196608 டி | 196608 ஈ |
| 196629 ஏ | 196630 ஏ |
| 196647 ஏ | 196693 ஏ |
| 199700 ஏ | 196720 ஏ |
| 196720 பி | 196736 ஏ |
| 196750 ஏ | 196750 பி |
| 196750 சி | 196750 டி |
| 196756 ஏ | 196756 பி |
| 196760 ஏ | 196760 பி |
| 196760 சி | 196773 ஏ |
| 196720 ஏ | 196820 பி |
| 196820 சி | 196820 டி |
| 196820 ஈ | 196825 ஏ |
| 196825 பி | 199830 ஏ |
| 196830 பி | 166831 ஏ |
| 196831 பி | 199831 சி |
| 196841 ஏ | 196841 பி |
| 199843 ஏ | 196843 பி |
| 196845 ஏ | 196845 பி |
| 196845 சி | 196847 ஏ |
| 196881 ஏ | 196886 ஏ |
| 196888 ஏ | 196891 ஏ |
| 196891 பி | 196891 சி |
| 196891 டி | 196894 ஏ |
| 196895 ஏ | 196896 ஏ |
| 196897 ஏ | 196897 பி |
| 196897 சி | 198167 ஏ |
| 198169 ஏ | |
| 198176 ஏ | 198178 ஏ |
| 198184 ஏ | 198189 ஏ |
| 198189 பி | 198193 ஏ |
| 198206 ஏ | 198207 ஏ |
| 198207 பி | 198210 ஏ |
| 198219 ஏ | 198231 ஏ |
| 198239 ஏ | 198272 ஏ |
| 198281 ஏ | 198281 பி |
| 198290 ஏ | 198290 பி |
| 198411 ஏ | 198458 ஏ |
| 198515 ஏ | 198515 ரூ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 189356 ஏ | 189356 பி |
| 189356 சி | 189356 டி |
| 190470 ஏ | 190476 ஏ |
| 190476 பி | |

ஜூன் மாதம்14 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியளின் படி. வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது;

### சங்கானை

| | |
|---|---|
| 164000 ஏ | 164000 பி |
| 166936 ஏ | 166936 பி |
| 179059 ஏ | 179059 பி |
| 179059 சி | 179478 ஏ |
| 179478 பி | 179478 சி |
| 181529 ஏ | 181685 ஏ |
| 183191 ஏ | 184849 ஏ |
| 184849 பி | 184849 சி |
| 186795 ஏ | 186795 பி |
| 186821 ஏ | 187019 ஏ |
| 187019 பி | 187020 ஏ |
| 187020 பி | 188670 ஏ |
| 188670 பி | 188670 சி |
| 188670 டி | 188715 ஏ |
| 188796 ஏ | 189349 ஏ |
| 189349 பி | 199451 ஏ |
| 190451 பி | 190519 ஏ |
| 191850 ஏ | |
| 191858 ஏ | 191859 ஏ |
| 191859 பி | 191976 ஏ |
| 192238 ஏ | 192251 ஏ |
| 192251 பி | 192266 ஏ |

| | |
|---|---|
| 192270 ஏ | 192273 ஏ |
| 192274 ஏ | 192274 பி |
| 192283 ஏ | 192284 ஏ |
| 192285 ஏ | 192285 பி |
| 192289 ஏ | 192289 பி |
| 192289 சி | 192295 ஏ |
| 192297 ஏ | 192304 ஏ |
| 192304 பி | 192332 ஏ |
| 192360 ஏ | 192360 பி |
| 192400 ஏ | 102400 பி |
| 192403 ஏ | 192403 பி |
| 19 403 சி | 192456 ஏ |
| 192456 பி | 192488 ஏ |
| 192488 பி | 193494 ஏ |
| 193494 பி | 193498 ஏ |
| 193668 ஏ | 193758 ஏ |
| 193758 பி | 193762 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 187123 ஏ | 187123 பி |
| 191963 ஏ | 191963 பி |
| 192217 ஏ | 192217 பி |
| 192217 சி | 192242 ஏ |
| 192344 ஏ | 192344 பி |
| 193408 ஏ | 192409 ஏ |
| 192410 ஏ | 193581 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 174601 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 141807 ஏ | 187065 ஏ |
| 189481 ஏ | 189481 பி |
| 189481 சி | 189481 டி |
| 189481 ஈ | 189481 எப் |
| 189481 ஜி | 190524 பி |
| 190618 ஏ | 190721 ஏ |
| 190738 ஏ | 190738 பி |
| 190738 சி | 190749 ஏ |
| 190749 பி | 191805 ஏ |
| 191810 ஏ | 191810 பி |
| 191856 ஏ | 191869 ஏ |
| 191869 பி | 191922 ஏ |
| 191935 ஏ | 191966 ஏ |
| 196966 பி | 191993 ஏ |
| 191998 ஏ | 191998 பி |
| 191998 சி | 192239 ஏ |
| 192239 பி | 192255 ஏ |
| 192255 பி | ı92255 சி |
| 192264 ஏ | 192278 ஏ |
| 192298 ஏ | 192300 ஏ |
| 192309 ஏ | 192309 பி |
| 192314 ஏ | 192337 ஏ |
| 192378 ஏ | 192397 ஏ |
| 192406 ஏ | 19ம்418 ஏ |
| 192428 ஏ | 192428 பி |
| 192433 ஏ | 192445 ஏ |
| 192446 ஏ | 192448 ஏ |
| 193499 ஏ | 193513 ஏ |
| 193574 ஏ | 193582 ஏ |
| 193600 ஏ | 103600 பி |
| 193656 ஏ | 193689 ஏ |
| 193757 ஏ | 193773 ஏ |
| 193773 பி | 193776 ஏ |
| 193783 ஏ | 194203 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 191794 ஏ | 191794 பி |
| 191834 ஏ | 191834 பி |
| 192000 ஏ | 192050 ஏ |
| 192303 ஏ | 192303 பி |
| 193303 சி | 193303 டி |
| 192313 ஏ | 192348 ஏ |
| 192354 ஏ | 162354 பி |
| 192463 ஏ | 192479 ஏ |
| 192480 ஏ | 193525 ஏ |
| 193557 ஏ | 193560 ஏ |
| 193583 ஏ | 193665 ஏ |
| 193665 பி | 193665 சி |
| 193665 டி | 193665 ஈ |
| 193747 ஏ | 193777 ஏ |
| 194200 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 185089 ஏ | |
| 188733 ஏ | 188733 பி |
| 190524 ஏ | 190565 ஏ |
| 190565 பி | 191800 ஏ |
| 191800 பி | 191932 ஏ |
| 191932 பி | 191945 ஏ |
| 191945 பி | 191955 ஏ |
| 191955 பி | 192399 ஏ |
| 192417 ஏ | |
| 192424 ஏ | 192424 பி |
| 192424 சி | 192424 டி |
| 192449 ஏ | 192462 ஏ |
| 192419 ஏ | |
| 192485 ஏ | 192485 பி |
| 192485 சி | 193492 ஏ |
| 193605 ஏ | 193605 பி |
| 193639 ஏ | 193639 பி |
| 193639 சி | 193713 ஏ |
| 193733 ஏ | 163733 பி |
| 193760 ஏ | 196776 பி |
| 193776 சி | 193776 டி |
| 193776 ஈ | 193776 எப் |
| 193776 ஜி | 194335 ஏ |
| 194335 பி | 194335 சி |
| 194365 ஏ | |

# தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

## கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்துதல்

01; 2001. 05. 31 ஆம் திகதியில் பூர்த்திபாக்கப் பட்ட 44 சங்கக் கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள்கீழ்க்காணும்கிளைகளில்2001.05.15ஆம் திகதி தொடக்கம் 10 நாட்கள் வரை காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

| காட்சிப் படுத்தும் இடம் | கிளை இல | கிளையின் பெயர் |
|---|---|---|
| 01. துர்க்காபுரம் கிளை | 01 | தொல்லிப்பனை |
| 02; உடுவில் கிளை | 02 | துர்க்காபுரம் |
| | 03 | வவுணாவத்தை |
| | 33 | மாவை மடத்தடி |
| | 34 | தெல்லி, அரச வைத்திய சாலை அருகாமை |
| 03. உரும்பிராய் கிளை | 07 | கருகம்பனை |
| 04. மானிப்பாய் கிளை | 09 | கீரிமலை |
| | 11 | காங்கேசன்துறை |
| | 12 | மாவிட்டபுரம் |
| | 13 | மாவிட்டபுரம் மத்தி |
| | 14 | கொல்லங்கலட்டி |
| | 16 | கட்டுவன் |
| | 17 | குரும்பசிட்டி |
| | 29 | வீமன்காமம் |
| | 41 | மாவை-கிளானை |
| 05. கந்தரோடை கிளை | 04 | வீராங்கொடை |
| 06. தாவடி கிை | 10 | சிமெந்து தொழிற்சாலை வாசல் |
| | 15 | வறுத்தலைவிளால் |
| | 22 | பலாலி மத்தி |
| | 27 | காங்கேசன்துறை சந்தி |
| | 30 | தையிட்டி |
| | 31 | ஊறணி |
| | 35 | மாவை கலட்டி |
| | 38 | மாங்கொல்லை |
| 07. இணுவில் மத்தி கிளை [ஆஸ்பத்திரியடி] | 05 | பன்னாலை |
| | 08 | வடமூலை வாவிளால் |
| 08; கோணாவளை-குட்டியப்புலம் கிளை | 19 | ஒட்டகப்புலம் |
| | 20 | வயாவிளான் |
| | 28 | வீமன்காமம் வடக்கு |
| | 39 | கோணாவளை குட்டியப் புலம் |
| | 40 | குரும்பசிட்டி கிழக்கு |
| 09. இருபாலை கிளை | 06 | விழிசிட்டி |
| 10; சித்தங்கேணி கிளை | 23 | பலாலி கிழக்கு |
| | 24 | மயிலிட்டித்துறை |
| | 25 | மயிலிட்டி கிழக்கு |
| | 26 | மயிலிட்டி வடக்கு |
| | 32 | பலாலிச் சந்தி |
| | 21 | பலாலி மேற்கு |
| | 37 | ஊரங்குணை |
| | 42 | திருப்பூர்-மயிலிட்டி |
| 11; இளவாலை கிளை | 08 | இளவாலை |
| 12; இணுவில்சந்திகிளை | 36 | வசந்தபுரம் |
| | 43 | சீந்திப்பந்தல் |
| | 44 | மயிலங்கூடல் |
| 13; தலைமைக்காரியாலயம் | 44 | கிளைகளில் வாக்காளர் பட்டியல்கள் |

02; காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் சங்க உபவிதிப்படி வாக்காளர் ஆவதற்கு தகுதியிருந்தும் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களும், முழுப் பெயரிலோ அல்லது முகவரியிலோ பிழை உள்ளவர்களும் தமது ஆட்சேபனையை 20001.06.25 ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாக, செயலாளர், தெல்லிப்பளை ப.நோ; கூ.சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்;

சி. முருகையா,
செயலாளர்
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்

துர்க்காபுரம்,
தெல்லிப்பளை,
2001.06.15

(இ-2118)

## உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைக்கூறும் அமைச்சரின் கூற்றுக்கு கண்டனம்; கவலை

### அரச மருத்துவர் சங்கக்கிளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 2000 ஆம்ஆண்டுத் தொடக்கத்தில் யுத்தம் தீவிரமடைந்தபோது தென்னிலங்கை மருத்துவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறி விட்டனர். இந்நிலையில் வடக்கு-கிழக்கு மருத்துவர்களே தமது சேவையை உயிர்த்துடிப்புடன் தொடர்ந்தனர்.

எனவே அரசு போலியான நியாயங்களைக் கற்பித்து எமக்குநியாயமாகக்கிடைக்க வேண்டிய உரிமைகளைமறுப்பது மிகவும்கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதுமாகும் என அரச மருத்துவர்கள் சங்கக்கிளை அணமையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கபபட்டுளளதாவது,

வடக்கு கிழககில்பணியாற்றும் வடக்கு- கிழக்கைச் சேராத மருத்துவர்களுக்கான விசேட கொடுப்பனவு என்பது ஒரு இனப்பாகுபாடான நடவடிக்கை அல்ல என்றும் இதனால் தமிழ் பேசும மருத்துவ அதிகாரிகளும பயன் பெற்றுள்ளனர் எனறு சுகாதார அமைச்சர் தெரிவித்திருப்பதை நாம் வன்மையாக மறுக்கின்றோம்.

இக்கொடுப்பனவு இங்கு பணியாற்றும் எல்லாச் சிங்களமருத்துவர்களுக்கும், ஒரு சில தமிழ்பேசும் மருத்துவர்களுக்கும வழங்கப்படுகின்றது.

நிலைமை இவ்வாறிருக்க ஒருசில தமிழ்பேசும் மருத்துவர்கள பயனடைவதைக் காட்டி இனப்பாரபட்சம் காட்டப்படவில்லை என்று கூறுவது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கு ஒப்பாகும்.

அத்தோடு, வடககு-கிழக்கில் பணியாற்றுவதற்குமருத்துவர்கள் மறுப்பதால் தான் இக்கொடுப்பனவு வழங்க வேண்டி ஏற்பட்டதெனக் கூறும்அமைச்சர், இதே சலுகைகளை சகல மருத்துவர்களுக்கும் பாகுபாடின்றி முன்பே வழங்கியிருந்தால் மேலும் பல வடக்கு- கிழக்கைச் சேர்ந்த மருத்துவர்கள் இங்கு சேவையாற்ற விருமபியிருக்கக் கூடும.

இதனால் அரசு தென்னிலஙகை மருத்துவர்களை வடக்கு-கிழக்கில பணியாற்ற நிர்ப்பந்தித்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது,

எந்தவித சலுகைகளையும் பாராது இங்கு கடமையாற்றும் எங்களுககு இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக நாங்கள் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்ட இப் போராட்டத்தினால் மக்களுக்கு ஏற்பட இருக்கும் துன்பங்களுக்கு நாங்கள் எங்களுடைய மன வருத்தத்தை மீண்டும் மீண்டும் தெரிவிக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

### மதுஉற்பத்திசெய்தவர் பிணையில்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மது உற்பத்தி செய்து வந்த உருபபிராய் அன்னங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர்,

நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது,

10ஆயிரம ரூபா காசுப் பிணையிலும் 30 ஆயிரம்ரூபா சரீரபபிணையிலும செல்ல நீதிபதி உத்தரவிட்டார்.

மேற்படி பெண்ணின் வீட்டிலிருந்து 270 லீற்றர் மதுசார உற்பத்திக்கான கோடா மற்றும் உற்பத்தி உபகரணங்களை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## இராசி பலன்

(16 6. 2001)
(ஆனி 2 சனி)

தசமி மு. இ 9. 41 வரை
ரேவதி மாலை 6. 38 வரை
ராகுகாலம் 8. 53- 10. 23
நல்ல நேரம் 2. 53- 4. 23

**மேடம்**
கோபப்படுதல், பிரயாணம், சயன சுகக்குறைவு, முயற்சி தாமதம்.

**இடபம்**
காரியம் கைகூடும், கௌரவம், தனலாபம, குடும்பசுகம்.

**மிதுனம்**
உத்தியோகச்சிறப்பு, அதிகாரம், நல்லசெய்தி, முயற்சி ருத்தி.

**கடகம்**
கட்டுப்பாடு, திடீர் நன்மை, கௌரவம், பிரயாணம்.

**சிங்கம்**
பிரயாணபயம், காரியதடங்கல், அமைதிக்குறைவு, உறவினர் மனஸ்தாபம்.

**கன்னி**
உல்லாசம், பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**துலாம்**
சத்துருஜெயம், உடல்நலம், தொழில விருத்தி, மன மகிழ்ச்சி.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை, முயற்சி தாமதம். மனச்சஞ்சலம், தாழ்வு நிலை.

**தனுசு**
உறவினர் வெறுப்பு, தாய் வழி உறவு. அற்பர் தொடர்பு, காரிய, தாமதம்.

**மகரம**
இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, சகோதரர் உதவி.

**கும்பம்**
வாக்குவாதம், வீண்செலவு கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
செல்வாக்கு, ஆழ்ந்தசிந்தை நண்பர்கள் உதவி, காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## செய்தித் துளிகள்

### திருடர்களால் தொல்லை

(யாழ்ப்பாணம்)

கட்டைப்பிராய் பகுதியில் திருடர்தொல்லை அதிகரித்து வருவதையடுத்து, அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து விழிப்புக்குழு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் இப்பகுதியில் உள்ள பி. சிவானந்தம் என்பவரது வீட்டினுள் ஒடுபிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள், பணம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர். (உ-10)

### பாராளுமன்றம் ஆராய முடியாது

(கொழும்பு)

நாட்டின் அரசியல்யாப்பின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் மோசமான நடவடிக்கைகளை, அந்தப் பதவிக்கு பொருத்தமில்லாத நடவடிக்கைகள் என்பன பற்றி பாராளு மன்றம் ஆராய முடியாதென கொழும்பு சட்டத்தரணிகள் சங்கம கூறியுள்ளது

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தவறுகளை ஆராய்ந்து அது தொடர்பான சட்டப் பிரமாணங்களை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருக்கின்றபோதிலும் அது தொடர்பான நிலையியல் கட்டளைகளைத் தான் பாராளுமன்றம் உருவாக்கியுள்ளதே தவிர சட்டங்கள் எதனையும் வரைந்திருக்கவில்லை என அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-8)

### நீதிமன்றங்கள் அமைக்க நிதியுதவி

[கொழும்பு]

உலகவங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்திலும்திருமலையிலும் இரு நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படும் என்றும் நாட்டில் உள்ள ஏனைய நீதிமன்றங்களும் அந்நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்படும் என்றும் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார். (உ-8)

### படகுகள் மீட்கப்பட்டன

(வடமராட்சி கிழக்கு)

கடந்த புதன்கிழமை மாலை வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட மீனவர்களின் 6 படகுகளையும், இன்பருட்டியில்பறிமுதல் செய்யப்பட்ட 3 படகுகளையும் பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் பரஞ்சோதி ரவீந்திரநாதன் படையினருடன் நேற்றையதினம் தொடர்பு கொண்டு மீட்டுக் கொடுத்துள்ளார். (உ-43)

### கராத்தே போட்டி

(சுண்டுக்குளி)

சோட்டோக்கான் கராத்தே சர்வதேச சம்மேளன 5 ஆம் ஆண்டின் நிறைவையொட்டி எதிர்வரும் 23, 24 திகளில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் உள்ளக விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சுமார் 60 மாணவர்கள் கலந்து கொள்ளும்கராத்தே போட்டிக்கு பிரதம தீர்ப்பாளராக சென்சேடி அன்ரோ டினேஸ் பளுதூக்கும் போட்டிக்கும் போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராக விளையாட்டு உத்தியோகத்தர் மோகதாஸ் ஆகியோர் கடமையாற்றுவார். [உ-110]

### இளைஞரை காணோம்

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து புகையிரதம் மூலம் கடந்த 9 ஆம் திகதி கொழும்பிற்கு சென்ற இளைஞர் ஒருவரைக் காணவில்லையென உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த செல்வராசா தர்மராசா [வயது 29] என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார். (உ-5)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புதுயுகத்திற்கான வழிகாட்டல் மாணவர் ஆக்கக் கண்காட்சி இன்றும் நாளையும் யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யா. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் சி. சிற்றம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

### பிரியாவிடையும் கௌரவிப்பும்

[யாழ்ப்பாணம்]

ஓய்வுபெற்றுச் செல்லும் இலங்கை வங்கிவடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் திருமதி ஐ. பி. ரட்ணதுரையின் பிரியாவிடையும், கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. [உ-10]

### பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம் புளியடி சித்தியம்பதி அண்ணமார் தேவஸ்தான வருடாந்தப் பொங்கல் விழா இன்று அதிகாலை 5. 30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பொங்கல் மடைப் பூசை என்பன நடைபெறும். [உ]

## கைக்குண்டு வைத்திருந்த ரெலோ உறுப்பினருக்கு 2 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

கைக்குண்டு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ரெலோ உறுப்பினர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டுவருடச்சிறைத்தண்டனையும் 2ஆயிரத்து 500ரூபா அபராதமும் வவுனியா மேல் நீதி மன்றத்தால் விதிக்கப்பட்டது.

வவுனியாவில் ரெலோ கட்சியிடம் இருந்து ஆயுதங்கள் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உ-8)

## முஸ்லிம்களின் கோரிக்கை இனவாதத்தை தூண்டும்

### பௌத்தமகாசம்மேளனம் எச்சரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்கள் கல்முனையில் தனியான நிர்வாக மாவட்டம் அமைக்குமாறு கோருவது இனவாதத்தைத் தூண்டுவதாகவும், அவ்வாறு தனி மாவட்டம் அமைவதை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் இலங்கை பௌத்தமகா சம்மேளனம் அறிவித்துள்ளது.

பௌத்தமகா சம்மேளனத்தின் தலைவர் ஹரணபஜித ஞானதேரர், செயலாளர் திவியாகம யசோசிங்க தேரர் ஆகியோர் கையொப்பமிட்டு, கல்முனையில் தனியான மாவட்டம் அமைவதை எதிர்க்கும் அறிக்கையொன்றை வெளியிட்டனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தனிமாவட்டக் கோரிக்கை இனங்களின் ஐக்கியத்தைப் பாதிக்கும். அததுடன் இனவாதத்தையும் அது வளரச் செய்யும்.

புத்தபெருமான் விஜயம் செய்த பிரதேசமாகவும், பல முக்கிய பௌத்த வணக்கஸ்தலங்கள் உளள பகுதியாகவும் கல்முனை விளங்குவதால் அது தனி நிர்வாக மாவட்டமாக அமைவது தடுக்கப்பட வேண்டும்.

மேலும், அப்பகுதியில்சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளையும் பௌத்த சமயத்தையும் பாதுகாக்கும் பொருட்டு நிர்வாக மாவட்ட கோரிக்கையை தாம் எதிர்ப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்திய இல. கடற் பிரதேசத்தில் போதைப் பொருட் கடத்தல் தீவிரம்

### முறியடிக்க பகீரதப்பிரயத்தனம்

(கொழும்பு)

இலங்கை- இந்தியக் கடற்பிரதேசத்தினூடாக போதைப்பொருள கடத்தல் தீவிரமாக நடைபெற்று வருவதை முறியடிக்கும் விதத்தில் இலங்கையும் இந்தியாவும் கூட்டாக ஒரு திட்டமொன்றை வகுத்துச் செயற்படத்தொடங்கியுள்ளன. இவ்வாறு போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவந்த பலரின் பெயர்விபரங்களை இந்தியப் புலனாய்வுத்துறையும் சீ. பீ. ஐ யும் வெளியிட்டுள்ளன.

இக்கடத்தல் காரர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும் இந்தியப் புலனாய்வுத் துறையினர் இலங்கை அதிகாரிகளை எச்சரித்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தின் பெங்களூரிலிருந்து இவை கடத்தபபடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்திய அதிகாரிகள், 17 நைஜீரியப் பிரஜைகளையும் 16 இலங்கையர்களையும் இது தொடர்பாக கைது செய்துள்ளனர். (உ)

# க. பொ. த உயர்தர மாணவர்க்கான உயிரியல் பாட வினாக்கள் -18

**ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc.**

## மாதிரி அமைப்புக் கட்டுரை வினாக்கள்

1) மனிதனால் உட்கொள்ளப்பட்ட காபோவைதரேட் சாப்பாட்டுக்கு என்ன நடக்கும் என விவரிக்க?

2) i) தாவரங்களின் வளர்ச்சி என்றால் என்ன?
ii) கலவியத்தம் என்றால் என்ன?
iii) வளர்ச்சி வளையியின் முக்கிய படிகளைத் தருக?
iv) தாவர வளர்ச்சிக்குக் கல மட்டத்தில் பங்காற்றும் மூன்று பிரதான செயன்முறைகள் எவை?
v) நீர் கற்ற ஓமோன்களையும் அவற்றின் இரண்டு தொழில்களையும் தருக?

3) i) ஒளித் தொகுப்பு என்றால் என்ன?
ii) ஒளித்தொகுப்பின் உலகளாவிய முக்கியத்தும் யாது?
iii) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கங்கள், இருள் நிலைத் தாக்கங்கள் பச்சைய உருமணியின் எப்பகுதியில் நடைபெறும்?
iv) ஒளித்தாக்கத்தின் போது பச்சைய உருமணியில் நடைபெறும் பிரதான நிகழ்வுகளைக் கூறுக?
v) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்க விளைவுகள் இருட் தாக்கங்களின் போது காபோவைதரேட் தொகுப்பில் பயன்படுத்தப்படும். இச் செயலில் ஈடுபட்டுள்ள மூன்று பிரதான கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக?

4) i) உயிர்ப்பல்வகைமை எனும் பதத்தைச் சுருக்கமாக விளக்குக?
ii) உள்நாட்டுக் குரிய இனங்கள், மையக்கல் (Keystone) இனங்கள், Flagship இனங்கை என்றால் என்ன?
iii) இலங்கையில் Flagship இனம் எனக் கருதப்படக் கூடிய ஒரு விலங்கைப் பெயரிடுக?
iv) அங்கிகள் பாகுபடுத்தப்பட்டுள்ள 5 இராச்சியங்களையும் தருக?
v) அங்கிகளைப் பெயரிடும் போது பொதுப் பெயர்களுக்குப் பதிலாக விஞ்ஞான ரீதியிலான பெயர்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை என்ன?
vi) இருசொற் பெயரீடு என்றால் என்ன?
vii) இருசொற்பெயரீட்டில் பின்பற்றும் சர்வதேச சட்டங்கள் யாவை?
viii) பூக்குந் தாவரங்கள் புவிக்குரிய வாழ்க்கை முறைக்கு முழுதாக இசைவாக்க மடைவதற்கு ஏதுவாகவிருந்த கூர்ப்பு ரீதியான இயல்புகளில் முக்கியமான ஐந்தைக் கூறுக?
ix) நகருயிர்கள் நிலத்திற்குரிய வாழ்க்கை முறைக்கு முழுதாக இசைவாக்கமடைய ஏதுவாக இருந்த 5 கட்டமைப்பு இயல்புகளைத் தருக?

## விடைகள்

வினா இல - 14

வினா - 1

1) a) மனிதனுக்கு அத்தியாவசியமான இடங்களில் மிக அதிகளவில் பெருக்கமடைந்து மனிதனின் தொழிற்பாடுகளுக்குப் பல்வேறுபட்ட வழிகளில் இடையூறுகளை ஏற்படுத்தும் சிறிய தாவரங்கள்.

b)
- பொதுவாகப் பூண்டுகளாகக் காணப்படும்.
- மிகக் குறுகிய கால வாழ்க்கை வட்டம் உடையவை.
- மிகத் துரிதமாக வளர்ச்சியடையக் கூடியன. பதியமுறை இனப்பெருக்கம் மூலம் மிக விரைவில் இனப்பெருக்கமடையும்.
- கூடிய வினைத்திறனுடன் இலிங்கமுறை இனப்பெருக்கத்தை மேற்கொள்வதால் மிக அதிகளவில் பழங்களையும் வித்துக்களையும் தோற்றுவிக்கும்.
- பழங்களும் வித்துக்களும் கூடிய வினைத்திறனுடன் பரம்பலடையக் கூடிய இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும்.
- பரந்த வீச்சுடைய சூழல் நிபந்தனைகளிலும் தப்பி வாழக்கூடியதாகவும் வளர்ச்சியடையக் கூடியதாகவும் காணப்படும்.
- ஏனைய பயிர்த் தாவரங்களுடன் வெற்றிகரமாக ஒளி, வாழிடம், நீர், கனியுப்புப் போசணைப் பொருட்கள் போன்றவற்றிற்குப் போட்டியிடும் ஆற்றலைக் கொண்டிருக்கும்.

c) **நன்மைகள்**
- மண்ணரிப்பையும் நீர் முறையரிப்பையும் தடுக்கும்.
- மண்ணின் ஈரலிப்பை பேண உதவும்.
- மண்ணிற்கு அதிகளவு சேதனப்பதார்த்தத்தைச்சேர்க்கும்.
- சில களைகள் வளிமண்டல நைதரசனைப் பதிக்கும்.
  உதாரணம்:- Mimosa pudica
- விலங்குகளுக்கு உணவாகப் பயன்படும்.
  உதாரணம்:- புற்கள்
- மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.
  உதாரணம்:- Leucas (முடிதும்பை)
- அழகுக்காக வளர்க்கப்படும்.
  உதாரணம்:- Elephantophus

**தீமைகள்**
- பயிர்த் தாவரங்களுடன் நீர், வாழிடம், கனியுப்பு, ஒளி போன்றவற்றிற்குப் போட்டியிடுவதால் பயிர்த்தாவரங்களின் விளைச்சல் குறையும்.
- பயிர்த்தாவரங்களில் ஏற்படும் நோய்களுக்குப் பொறுப்பான நோய்க்காவிகளுக்கு தற்காலிக வாழிடமாகக் காணப்படும்.
- பயிர்த்தாவரங்களின் வளர்ச்சியைத் தடுக்கும் நஞ்சுப் பதார்த்தங்களைச் சுரந்து மண்ணில் விடும்.
- நீர்க் கால்வாய்களையும் நீர்ப்பாசனத் தொகுதிகளையும் அடைக்கும்.
  உதாரணம்:- Salvinia
- நீர் நிலைகளின் மேற்பரப்பை மூடி வளர்வதால் நீர்நிலைகளின் ஆழமான பகுதிகளில் வாழும் உயிரங்கிகளுக்கு ஒளி, ஒட்சிசன் செல்ல முடியாமலிருக்கும்.
  உதாரணம்:- Pistia, Salvinia
- மனிதனில் நோய்களைப் பரப்பும் காவிகளின் வாழிடமாகக் காணப்படும்.
- வீட்டுத் தேவைகளுக்கு வினைத்திறனுடன் நீரைப் பாவிக்க முடியாமல் இருத்தல்.
- குளங்களையும் அருவிகளையும் பயன்படுத்த முடியாமல் இருத்தல்.
- சூழலியல் சமனிலையைக் குழப்பும்.
- வயல் எலிகளின் மறைவிடமாகக் காணப்படும்.

d) 1) பௌதீக முறைக் கட்டுப்பாடு.
2) இரசாயன முறைக் கட்டுப்பாடு.
3) உயிரியல் முறைக் கட்டுப்பாடு.
4) ஒருங்கிணைந்த களை முகாமைத்துவம்.

e) **பௌதீக முறைக் கட்டுப்பாடு**

இதன் போது கையால் பிடுங்குதல், ஆழமாக உழுதல், நெருப்பு வைத்தல், நீரைத் தேக்கிக் கட்டல், சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை என்பன மேற்கொள்ளப்படும்.

**இம் முறையின் நன்மைகள்**
- இலகுவான முறை.
- நெருப்பு வைப்பதால் களைகளும் மண்ணினுள் காணப்படும் வித்துக்களும் கூட அழிக்கப்படும்.
- மண் வளம் கூடடப்படும்.
- சூழல் மாசடைதல் தவிர்க்கப்படும்.

**தீமைகள்**
- விளைவைப் பெற நீண்ட காலம் எடுக்கும்
- அதிகளவு வேலையாட்கள் தேவை
- கையால் பிடுங்கும் போது இளம் நாற்றுக்களையும் இளம் களைகளையும் வித்தியாசப்படுத்தல் கடினம்
- களைகளை முற்றாக அழிக்க இயலாது.
- நெருப்பு வைப்பதால் பயன் தரும் மண்புழு, பீடைகளின் இயற்கை எதிரிகள் போன்றனவும் அழியும்

**இரசாயன முறைக்கட்டுப்பாடு**

இதன் போது களைநாசினிகள் பாவிக்கப்படும்.

**இம்முறைக்கட்டுப்பாட்டின் நன்மைகள்.**
- பிரயோகம் இலகுவானது
- வேலையாட்கள் அதிகம் தேவை இல்லை
- களைகளையும் அவற்றின் இனப்பெருக்கக் கட்டமைப்புக்களையும் விரைவாக அழிக்கலாம்
- களைகள் மிகச் செறிவாகக் காணப்படின் குறைந்த செலவுடன் கட்டுப்படுத்தலாம்.

**தீமைகள்**
- தொடர்ச்சியாகக் களைகொல்லிகளைப் பாவிப்பதால் களைகள் பெருகும்.
- சூழல் மாசடையும்.
- விசிறுபவர் பாதிக்கப்படலாம்.
- நீர் வாழ் விலங்குகள், பறவைகள் பாதிக்கப்படலாம்.
- நன்மையளிக்கும் உயிரினங்கள் பாதிப்படையும்.

**உயிரியல் கட்டுப்பாடு**

இங்கு களைகளைக் கட்டுப்படுத்தவென உயிரங்கிகள் பயன்படுத்தப்படும்.

**நன்மைகள்**
- குறித்த களைக்குத் தனித்துவமானது.
- சூழல் மாசடைதல் தவிர்க்கப்படும்.
- ஆரம்பச் செலவு அதிகமாயினும் இறுதியில் செலவு குறைவு

**தீமைகள்**
- விளைவைப் பெற நீண்ட காலம் எடுக்கும்.
- ஆரம்பச் செலவு அதிகம்.
- பயன்படுத்தும் அங்கி பீடையாக மாறலாம்.
- பயன்படுத்தும் அங்கி நோய்க்காவியாக மாறலாம்.

**ஒருங்கிணைந்த களை முகாமைத்துவம்**

இதன் போது பல்வேறுபட்ட முறைகள் ஒன்றாகப் பிரயோகிக்கப்படும்.

**நன்மை**
- சூழல் மாசடைதலைக் குறைக்கலாம்.

f) களை நாசினிகளின் வகைகளாவன.
1) சேதனக்களை நாசினி:- இதில் இரண்டு பிரிவுகள் உண்டு
i) சர்வகளை நாசினி உதாரணம்:- பரக்குவாட்
ii) தேர்வுக்குரிய களைநாசினி-இதிலும் இருவகைகள் உண்டு
அவையாவன,
அகன்ற இலைக் களைகொல்லி-உதாரணம்:- MCpA
ஒடுங்கிய இலைக் களைகொல்லி-உதாரணம்:-2, 4, D
2) அசேதனக்களை நாசினி:-
உதாரணம்:- Sodium arsenite
Sodium chlorate

g) 1) பொருத்தமற்ற களை கொல்லியைப் பாவிக்கக் கூடாது உதாரணமாக ஒரு வயலில் அகன்ற இலைக் களைகளும் ஒடுங்கிய இலைக்களைகளும்காணப்படும் போதுஅகன்ற இலைக்களைகொல்லி பாவிக்கப்படின் ஒடுங்கிய இலைக்களைகள் விரைவாகப் பெருகும்.
2) மிக அதிகளவில் பாவிக்கக் கூடாது.
3) உகந்த நேரத்தில் பாவிக்க வேண்டும்.

(வினா-2டிற்கான விடைகள்(நாளை தொடரும்)

# பாதயாத்திரிகர்களுக்கு வேண்டிய உதவி

## வழங்க அமைச்சர் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திலிருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்திற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யோகி ஸ்ரீ சிவசுந்திரி சுவாமி கதிர்காமபாத யாத்திரைச் சங்கத்தினர் நடத்தவுள்ள இப் பாதயாத்திரையில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மட்டக்களப்பு கிரானிலிருந்து ஆரம்பிக்கும் இப்பாதயாத்திரை ஆரையம்பதி, காரைதீவு, திருக்கோவில், உகந்தை வழியாக கதிர்காமம் சென்றடையும்.

பக்தர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும், தேவையான வசதிகளையும் வழங்குவதற்கு உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, இந்தஉதவிகள் தனது அமைச்சின்கீழ் உள்ள இந்து கலாசாரத் திணைக்களம்மூலமும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மூலமும் வழங்கப்படப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

# இறுதித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகவெளிநிலை தேர்வு வணிகமானி 1999 கற்கை நெறி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட் கிழமைதொடக்கம் 29 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரையிலான ஆறு தினங்கள் நடைபெறுமென வெளிநிலைத் தேர்வின உதவிப்பதிவாளர் ஆர். கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (உ-6)

# வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக '' திராவிட அரசியல் குறித்ததான தமிழ் சினிமாவின்மீள்விசாரணை'' என்ற தலைப்பின்கீழ் மணிரத்தினத்தின் ''இருவர்'' எனும் திரைப்படம் இன்று மு. ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

# கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர்,

12 ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் யூலை மாதம் 12 ஆம் திகதிக்கு முன் நடத்த திட்டமிட்டுள்ளதாக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். (வ)

இன்று ஒரு தகவல்

# மூளைபலம்முக்கியமானது

என் நண்பர் தினமும் ஒரு தடவை திராட்சைப் பழச் சாறு சாப்பிடுவார். 'என்ன சார்! திராட்சை என்றால்உங்களுக்கு அவ்வளவு பிரியமா' என்றேன். 'பிரியமென்று இல்லை சார்! இதுஎனக்குஒரு அவசியத்தேவைஉங்களுக்கெல்லாம் இது அவசியமில்லை' என்றார். 'ஒன்றும் புரியவில்லையே' என்றேன். பார்த்தீர்களா அதற்குத் தான் சொன்னேன். 'மூளையை அதிகமாகப் பயன்படுத்தி வேலை செய்கிறவர்களுக்குத் தான் திராட்சை மிகவும் அவசியம்' என்றார்.

ஏதோ கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. நேராக எனக்குத் தெரிந்த ஒரு சித்த வைத்தியரிடம் போனேன். 'என்ன சார் இது விஷயம்' என்றேன், அவர் விவரமாகச் சொன்னார். 'திராட்சை, மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும், களைப்பைப் போக்கும் என்றார். அந்தப் பழத்துக்கு மட்டும் தான் அப்படி ஒரு சக்தியா? என்றுகேட்டேன், அப்படிஇல்லையென்று சொல்லிவிட்டு, அவர் விளக்கமாகச்சொல்லஆரம்பித்தார். அதைத்தான் நான்இப்போது உங்களுக்குச் சொலல ஆரம்பிக்கிறேன்.

மனிதனுக்கு மூளை தெளிவாகவும் இருக்க வேண்டும், வலுவாகவும் இருக்க வேண்டும. அப்படியெனறால் அதற்குத்தகுந்த ஊட்டம்கொடுக்க வேண்டும். சில வகையான பழஙகளுக்கு அந்த சக்திஇருக்கிறது. சில உலர்ந்த பழஙகளுக்கும் புதுப பழங்களுக்கும் மூளை, தசை, திசுக்களில் ஏற்படக் கூடிய நோய்களைப் போக்கிற தன்மையிருக்கிறது. வாதுமை இருக்கிறதே இது மூளைக்குச்சக்தியைக்கொடுக்கிறது. தசைகளுக்கு வலுவைக் கொடுக்கிறது. நரம்புகளுக்கும், பித்தப்பைக்கும் நோய்வராமல் காப்பாற்றுகிறது வால்நட் என்கிற பழமும மூளை பலவீனத்தைக் குணப்படுத்தும். அதோடு அத்திப் பழம், உலர்ந்த திராட்சை ஆகியவற்றைச் சேர்த்துச்சாப்பிட்டால் மிகவும் நல்லது.

பொதுவாக என்ன வென்றால், பாஸ்பரஸ் சத்து எந்த எந்தப் பழத்தில் அதிகமாக இருக்கிறதோ, அவையெல்லாம் மூளை, செல், திசு, இவற்றை எல்லாம் பலப்படுத்த உதவும் மூளைக்கு அதிகமாக வேலைகொடுக்கிறவர்கள் எல்லாம் பாஸ்பரஸ்சத்துஅதிகமாகஇருக்கிற பழங்களைச் சாப்பிட வேண்டும். அப்படிப் பார்த்தால், வாதுமை, அத்தி, திராட்சை பேரீச்சை, ஆப்பிள், ஆரஞ்சு இவைகளில்லெல்லாம் பாஸ்பரஸ் அதிகமாக இருக்கிறது. பாஸ்பரஸ் புலனுறுப்புகளுக்கும் ஊட்டச் சக்திகொடுக்கும்.

ஆப்பிள் மிகவும் நல்லது. தினம் ஒன்று சாப்பிடலாம். இருந்தாலும் நமதுஊரில் எல்லாரும் அப்படிச் சாப்பிடக் கூடிய வாய்ப்பும் இல்லை. வசதியும் இல்லை, என்ன செய்வது? திராட்சை, பேரிக்காய், வாழைப்பழம்,அத்திப் பழம் இவை எல்லாம் பித்த நீர்க்கோளாறுகளைச் சரி செய்து விடும். பழங்களில் இருக்கிற சர்க்கரைச் சத்துசீக்கிரத்தில் சக்தியாக மாறி விடும். அதனால் அவை உடம்புக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும். மூளையில் இரத்த ஓட்டம் குறைவாக இருந்தால் ஊட்டப் பற்றாக்குறை ஏற்படும். அது மூளையைப் பலவீனப்படுத்தும். மூளை பலவீனப் பட்டால் பலவிதமான நோய்களுக்கு அது இடம் கொடுக்கும். கேட்கிற திறன் பாதிக்கப்படும். பார்வை மங்கும். களைப்பு, மயக்கம், தலைவலி எல்லாம் வரும் அதனாலமூளையைப் பலமாக வைத்திருக்க வேண்டியது நமது கடமை. உங்களால முடிந்த அளவுக்குப் பழங்களைச் சாப்பிடுங்கள்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிடுங்கள் என்று நான் சொன்னால் உடனே நீங்கள், 'வாங்கிக் கொடுக்கிறதுயார்? நீயா? ஏனையா இப்படி வயிறெறிச்சலைக கிளப்புகிறாய்' என்று கேட்டாலும் கேட்பீர்கள்' அதனால தான் அப்படிச் சொன்னேன். நமது உடம்பில் எந்தப்பாகம பழுது பட்டாலும, உடனே மாற்று உறுப்பு வைத்து சிகிச்சை செய்து விடுகிறோம்.

அந்த அளவுக்கு வைத்தியம் வளர்ந்திருக்கிறது. இருந்தாலும் மூளையை மட்டும முழுதாக அப்படி வைத்துசிகிச்சை செய்ய முடியவில்லையே. அப்படி முடிந்தாலும்மூளையைக் கடன் கொடுக்க, தானம் செய்ய யார்தயாராகஇருக்கிறார்கள்?

அப்படியே தயாராக இருந்தாலும், விரும்பி வாங்கிற அளவுக்குத் தரமான மூளை இந்தக் காலத்தில் எங்கே கிடைக்கப் போகிறது? எந்த மூளையைப் பார்த்தாலும் அதில்வன் முறை எண்ணம் தானே அதிகமாகத் தெரிகிறது. அதனால் இருக்கிறது மோசமாகி விடக் கூடாது என்கிற அளவுக்கு மூளையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள், அவ்வளவு தான் சொல்வேன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நூல் நிலைய அமைதிக்கு சந்தையால் பங்கம்

வட்டுக்கோட்டை பொது நூல் நிலையத்துக்கு அருகாமையில் இயங்கும் தற்காலிக சந்தையின் செயற்பாட்டினால் நூல் நிலையத்தின் அமைதிச் சூழல் பாதிக்கப்படுவதாக வாசகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பகுதி மக்களுக்குரிய ஒரேயொரு பொது நூலகம் இது என்பதால், இதன் அமைதியான சூழலைப் பேண உடன் நடவடிக்கை எடுத்து உதவுமாறும்,

தற்காலிக சந்தையை வேறு இடமொன்றிற்கு மாற்றுமாறும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-59)

## வறிய சிறுவர்களுக்கு உதவிப் பொருட்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வறிய சிறுவர்களுக்கு, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் பாடசாலை உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன் அடிப்படையில் அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூறு சிறுவர்கள் பாடசாலைச் சீருடைகளையும், 75 சிறுவர்கள் உபகரணப் பொருட்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்களை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-75)

### தனது சொந்தக் கருத்தை

# ஆணித்தரமாக கூற எந்நிலையிலும் பின்னிற்காதவர் மூதறிஞர் சொக்கன்

### அறிஞர்களின் அருங்குணம் இதுவென்கிறார் ஆறுதிருமுருகன்

(அரியாலை)

மரபையும் நவீனத்தையும் இணைக்கின்ற பாலமாக நம் மத்தியில் வாழ்ந்து வருபவர் மூதறிஞர் சொக்கன். ஈழத் தமிழ் மரபு வழி அறிஞரான இவரின் நூல்கள் பாடசாலை மாணவர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை பயன்படுத்துமளவிற்கு கருத்தாழமும் கனதியும் கொண்டவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் வித்துவான்க. சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதிய 'இலக்கியக் கருவூலம்' நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமையா. பல்கலைக்கழக நூல் நிலைய கேட்போர் கூடத்தில் தமிழ் மன்றத்தலைவர் அ. பௌநந்தி தலைமையில் நடைபெற்றபோது வெளியீட்டுரை நிகழ்த்திய செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசியுரைகளை மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து சண்முகநாதக் குருக்கள், பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோரும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் வழங்கினர்.

ஆறு திருமுருகன் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நாம் மாணவர்களாக இருந்த காலத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் ஒரு வித்துவச்சபை இருந்தது. அச்சபையில் வித்துவான் சொக்கனும் ஒருவர். பிரார்த்தனை மண்டபத்தில் இவர்களின் வித்துவக் செருக்குகள் சொல் மாரியாகப் பொழியும். இதன் மூலம் பல தமிழ் அறிஞர்களை இவர்கள் உருவாக்கினார்கள்.

இலக்கியங்களை சொக்கன் நன்றாக ரசித்தவர். அதனால் அவர் யாக்கும் நூல்கள் முழுமை பெற்றனவாகக் காணப்படுகின்றன. இலக்கியக் கருவூலத்தில் இடம் பெறும் கட்டுரைகள் படிக்கின்ற மாணவர்களுக்கு ரசனையை ஏற்படுத்த வல்லன.

இன்று எழுத்தாளர்களும் அறிஞர் பெருமக்களும் தமது சொந்தக் கருத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தப் பின்னிற்கிறார்கள். ஆனால் சொக்கனிடம் இந்தப்பண்பு இல்லை. அவர் தனது ஆக்கங்களில் தன்குறிப்பை மிக அழுத்தமாக வலியுறுத்துவார். இந்தத் துணிவு ஆய்வாளருக்கு மிக மிக இன்றியமையாதது.

இன்றைய மாணவர்களுக்கு கற்கும் பாடங்களில் ஆழமான அறிவுகிடையாது, எனவே வித்துவான் சொக்கன் போன்ற அறிஞர்கள் பாரதம், இராமாயணம் முதலிய நூல்களை இரத்தினச் சுருக்கமாக வெளியிட்டு இளைய தலைமுறையினருக்கு ஒரு பூரணத்துவத்தை வழங்க வேண்டும என்று கேட்டுக் கொண்டார்.

நூலின் ஆய்வுரையை பண்டிதர் செ. திருநாவுக்கரசு, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர். (உ-106)

## நூல் அறிமுக விழா

(ஈச்சமோட்டை)

திருமறைக் கலாமன்றமும் மறைக்கல்வி நடுநிலையமும் இணைந்து நடாத்தும் அருட்தந்தை ஞா. பிலேந்திரனின் 'கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள்' எனும் நூல் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் மறையாசிரியர் எஸ். எவ். சௌந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையையும, வெளியீட்டுரையையும் குருமுதல்வர் ஜெபிரசெல்வராஜ அடிகளாரும் மதிப்பீட்டுரையை அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலிலுள்ள கிறிஸ்தவ துன்பியலில் நாட்டார் பாடல்கள் பற்றிய சொல் விளக்கத்தை திருமறைக்கலாமன்றசெயலாளர் ஜோன்சன் ராஜ்நமார் குழுவினர் வழங்குவார்கள். (உ- 59)

## கொழும்புத் துறையில் விரைவில் மீளக்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர விரைவில் வழி ஏற்படுத்தப்படும என வலி மேற்கு பிரதேசசபைத் தலைவர் என் திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அப் பகுதிமக்களுடன் மீள் குடியேற்றம் தொடர்பாக நடாத்தப்பட்ட கூட்டத்தில் உடனடியாக தமது சொந்த இடங்களில தம்மை குடியேறற நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வலியுறுத்தினர் என்று அவர் கூறினார்.

அப் பகுதியில் மிதிவெடிகள், பொறி வெடிகள் என்பன புதைந்து கிடப்பதால், அவற்றை அகற்ற முன் அவசரப்பட்டு மக்கள மீளக்குடியேறுவது ஆபத்தானது என்று அவர் கருத்துத் தெரிவித்தார். (உ-10)

## ஊரடங்கில் நடமாடியஐவர்கைது

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குவேளையில் நடமாடிய ஐந்து இளைஞர்கள் கடந்த புதன்கிழமைஇராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு யாழ்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் பகுதியைச்சேர்ந்த மேற்படி இளைஞர்களை யாழ். பொலிசார் பதில் நீதவான் சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அந்த இளைஞர்களுக்கு தலாஐந்நூறுரூபா அபராதம் விதித்து விடுதலைசெய்த நீதவான் அவர்களில் ஒருவரான கருணைராசா ரவீந்திரன் தொடர்பாக ஏற்கனவே மூன்று வழக்குகள் இருப்பதால் அவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-6)

## சிவாச்சாரியார் குழு கனடா செல்ல அமைச்சர் ஆவனசெய்வார்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீன முதல்வர் உட்பட பிரபல சிவாச்சாரியார் குழுவினர், சைவசமய நடவடிக்கைகளுக்காக கனடா செல்ல விசா பெறுவதற்கான உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அமைச்சு கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், நயினை நாகபூசணி அம்மன் ஆலய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள, நல்லூர் கந்த சுவாமி கோயில் பாேகேஸ்வரக்குருக்கள், மகா ஸ்ரீ நித்யானந்த பீடத்தைச் சேர்ந்த பாபுசர்மா ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சி. தவராசா, கே வி குகேந்திரன், எம். குணசேகரம் (சங்கர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிவாச்சாரியார்கள் குழு கனடா செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இச்சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (உ)

## பயிற்சி வகுப்பு இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் நடத்தும் பத்திரிகையாளர் பயிற்சி வகுப்பு இன்று மு. ப.10. 30மணிக்கு யாழ் அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சிவகுப்பில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்கள் மட்டுமன்றி விருப்பமுடையவர்களும் கலந்துகொள்ளலாம்என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-43)

## பிரதம நீதியரசருக்கு ஆதரவாக தீர்மானம்

### நீதிபதிகள் நிறைவேற்றினர்

(கொழும்பு)

பிரதம நீதியரசராக சரத் என். சில்வா பதவியேற்றதையடுத்து இலங்கையில் நீதித்துறையின் தனித்துவமும் கௌரவமும் உயர்ந்திருக்கிறது. இதனால் பிரதம நீதியரசர் தொடர்ந்தும் தனதுகடமையையும் பதவியையும்முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்று கோரும் தீர்மானமொன்று மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்க வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்க வருடாந்தக் கூட்டம் கொழும்பு காலிமுக ஹோட்டலில்சங்கத்தலைவர் நீதிபதி அன்ரூசோமவன்ச தலைமையில் நடைபெற்றது.

பிரதம நீதியரசருக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குஎதிராகவே மேற்படி தீர்மானம் நீதிபதிகள் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ மாணவரை மடக்க கழிவறையில் கமரா

லண்டனில் மிகவும் குறைந்த வயதிலேயே மாணவர்கள் புகைக்க ஆரம்பித்து விடுகிறார்களாம் பாடசாலையில் ஒரு பாடம் முடிந்து மறு பாடம் தொடங்குவதற்கிடையில் ஆசிரியர்களின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு கழிவறைக்குள் சென்று புகைத்து விட்டு வரும் மாணவர்களை எப்படித் தடுக்கலாம் என்று எண்ணிய பாடசாலை நிர்வாகம் இப் போது ஒரு ஏற்பாட்டை செய்துள்ளது.

இப் போது லண்டனில் உள்ள பிரபல பாடசாலை கழிவறைகளில் வீடியோ கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன. இவற்றைக் கவனிக்க தனி அதிகாரிகள் வேறு நியமிக்கப்பட்டுள்ளார்கள். யாராவது புகைத்தால் அதோ கதிதான். இந்த ஏற்பாட்டால் புகைக்கும் மாணவர்கள் பாடசாலை நிர்வாகத்தின் மீது இப் போது புகைய ஆரம்பித்துள்ளார்களாம்.

### ★ எலியென்றால் கிலி வேண்டாம்

எலியென்றால் சலிப்படையும் எம்மூர் மக்கள் மத்தியில் வியட்நாம் மக்கள் சற்று வித்தியாசமானவர்கள். 7 கோடியே 37 இலட்சம் வியட்நாம் மக்களிற்கும்எலிகளிற்கும் அப்படி என்ன தொடர்பென்று எண்ணுகிறீர்களா ?

அரிசியை பிரதான உணவாகக் கொண்ட வியட்நாம் மக்களிற்கு எலிக்கறி என்றால் ஒரே குதூகலம்தானாம்; எலிக்கறியுடன் அரிசிச் சோறுதான் அங்குள்ள அனேகமானோரின் விருப்ப உணவாக இருக்கிறது;

இங்கே கசாப்புக் கடைகளில் ஆடு, மாடு விற்பது போல வியட்நாம் கசாப்புக் கடைகளில் எலி இறைச்சி வியாபாரம் சூடு பிடித்துள்ளதாம்.

அவதானி

## ஆயுததாரிகள் பொலிஸார் மோதல்; 6பேர் பலி

[குவாதமாலா]

குவாதமாலா நகரில் ஆயுதம் தாங்கிய குழு ஒன்றிற்கும் பொலிஸாருக்குமிடையில் நடைபெற்றதாக்குதலில் குறைந்தது 6பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

பொலிஸார் மீது ஆயுதக் குழு தாக்குதல் நடததியதை யடுத்தே பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தினர்.

இம்மோதல் சம்பவத்தில் ஆறு சிவிலியன்கள் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

தாக்குதல்நடத்தியவர்களின் காரில் இருந்துவெடி பொருட்கள் துப்பாக்கிகள் என்பனபொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## திபேந்திராவின் காதலிக்கு விசாரணை ஆணைக்குழு அவசர அழைப்பாணை

(காட்மண்டு)

நேபாள அரசகுடும்பப் படுகொலைகள் சம்பந்தமாக விசாரணை நடத்திவரும் ஆணைக்குழு, தனதுகுடும்பத்தினரை சுட்டுக்கொலை செய்தவர் என்று கருதப்படும் இளவரசர் திபேந்திராவின் காதலி தேவ்யானிரா்ணாவைஆஜராகும்படி அழைப்பாணை விடுத்துள்ளது.

நேபாள, இந்திய அரச பரம்பரை உறவுகளைக் கொண்டுள்ள தேவ்யானி படுகொலைகள் நிகழ்ந்ததும் உடனடியாக டில்லிக்குச் சென்றார் என்றும், அங்கிருந்து மொஸ்கோவுக்கு அல்லது லண்டனுக்கு சென்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

படுகொலைச்சம்பவத்திற்கு சற்று முன்னர் இளவரசர் தனது கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்ட பத்து நபர்களுள் தேவ்யானியுடனேயே கடைசியாகப் பேசியுள்ளார் என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது;

இதேவேளை, ஆணைக் குழுமுன்சாட்சியமளிக்க அவர் மறுத்துவிட்டார் என்று இன்னொரு செய்தி தெரிவித்தது;

(உ-8)

## ரஷ்யாவின் தேசிய தினத்தையொட்டி இந்தியப் பிரதமர், ஜனாதிபதி வாழ்த்து

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்துவதில் ஆர்வமாக உள்ளதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுக்குஅனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தேசிய தினத்தையொட்டி அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே வாஜ்பாய் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் ஆண்டாண்டு காலமாகப் பேணப் பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாக விளங்குகிறது என்று மேலும் அச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய மக்களின் சார்பில் ரஷ்ய மக்களிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன். இரு நாட்டினது நன்மைகளுக்காக இந்திய - ரஷ்ய உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்;

[உ-9]

### இராணுவ நடவடிக்கைகளில்

# தோல்வி பெற்றதன் வெளிப்பாடே

# இல. அரசின் சமாதான முயற்சி

## தெளிவாகக் கூறுகிறார் வை. கோ

(சென்னை)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளிலிருந்து நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சோல் ஹெய்மை புறந்தள்ளுவது, சமாதான முயற்சிகளையே பின்னடையச் செய்யுமென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சமாதானத்தை விரும்பி விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்து மூன்றுமாத காலம் அரசுக்கு சந்தர்ப்பம் வழங்கினர்.

ஆனால் அப்பொழுது இலங்கை அரசாங்கம் சமாதானத்திலிருந்து விலகி இராணுவ ரீதியில் தீர்வுகாணும் முனைப்புடன் செயற்பட்டது;

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் வெற்றியடைய, அரசாங்கம் சீனா, இஸ்ரேல், பாகிஸ்தான் முதலிய நாடுகளிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்கி யுத்தத்தில் ஈடுபட்டது;

எனினும், யாழ்ப்பாணத்தைவிடுதலைப் புலிகளிடமிருந்து யுத்தம் மூலம் கைப் பற்ற முடியாதென்ற உண்மையை அரசாங்கம்உணர்ந்து கொண்டது.

இந்நிலையிலேயே இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சமாதான வழிமுறையை நாடியதென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுத்த போதும் இந்தியா மட்டும் அதற்கு இணங்கவில்லை யென்று வை. கோ; சுட்டிக் காட்டியுள்ளார்.

(இ)

## சீன-ரஷ்ய தலைவர்கள் புஷ்ஷின் திட்டத்திற்கு கூட்டாக எதிர்ப்பு

(பேஜிங்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷினது தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டத்தினை கூட்டாக எதிர்ப்பதென சீன ஜனாதிபதி ஜாங் ஷெமினும். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.

உலகின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை எதிர்க்க வேண்டியது உலகநாடுகள் அனைத்தினதும் பொறுப்பாகும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதியின் மேற்படி செயலை வெளிப்படையாகவே எதிர்த்துவரும் நாம் அமெரிக்க ஜனாதிபதியுடன் இதுகுறித்து பேசவும் தயாராக உள்ளோம் என்றும் அறிவித்துள்ளனர்;

(உ-9)

### உலக தரிசனம்

## புதிய எண்ணெய்க்கிணறுகள் ஈராக்கில் கண்டு பிடிப்பு

(தெஹ்ரான்)

ஈராக்கில் மேலும் புதிய மூன்று எண்ணெய்க்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கின்பெற்றோலிய நிறுவனம் அறிவித்துள்ளது.

மேற்படி கண்டுபிடிப்பின் மூலம் எண்ணெய் உற்பத்தியை 4 இலட்சம் பீப்பாய்களாக அதிகரிக்க முடியும் என அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

ஈராக் எண்ணெய் ஏற்றுமதியை ஒருமாதகாலத்திற்கு தடைசெய்வதாக அறிவித்த பின்னர் இக் கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம்கணிசமான அளவு எண்ணெய் உற்பத்தி கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

[உ-9]

## விடுதலைப் போராளிகள் தாக்கி 244 சூடான் படையினர் பலி

### ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டதாம்

[நைரோபி]

சூடானின் தெற்குப்பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இராணுவத் தொடரணி மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில் 244 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சூடானில் சிறுபான்மை கிறிஸ்தவர்களுக்கு கூடியளவு அதிகாரம் கோரி போராடிவரும் 'சூடான் மக்கள் விடுதலை இராணுவம்' என்ற போராளி அமைப்பினாலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 5மணி நேரம் நீடித்த இத் தாக்குதலில் 244 படையினர் கொல்லப்பட்டதுடன், பெருந்தொகையான படையினரை கடும் காயங்களுக்குள்ளாக்கியுள்ளதாக போராளிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி தாக்குதலில் புல்டோசர்கள் கவச வாகனங்கள் டிரக் வண்டிகள் மற்றும் பிக்சப் வாகனங்கள் என்பவற்றை தாம் கைப் பற்றியுள்ளதாக அப் போராளிகள் குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, பிறிதொரு தாக்குதல் சம்பவத்தில் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய நகரம் ஒன்றை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் போராளிகள் அறிவித்துள்ளனர். (உ-9]

## வாஜ்பாய்க்கு வாழ்த்துச் செய்திகள் குவிகின்றன

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மூட்டுமாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் உடல் நலம் தேறி வருவதையிட்டு வாழ்த்துச் செய்திகளும் வாழ்த்து அட்டைகளும் அவரது இல்லத்தில் குவிந்த வண்ணம் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன;

சீனா உட்பட உலகின் பல பாகங்களில் இருந்தும் பிரதமருக்கு வாழ்த்து செய்திகள் அனுப்பப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

இதே வேளை, முஸ்லீம்மத குருமார்கள் நேற்று முன்தினம் பிரதமரைச் சந்தித்து பச்சை வண்ண பட்டுத் துணியை அவருக்குப்போர்த்தி நல்ல உடல் நலத்துடன் இருக்க வாழ்த்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## பாக். குண்டுவெடிப்பிற்கு அரசே காரணம்

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முக்கிய நகரான கராச்சியில் இடம் பெற்ற நான்கு குண்டுவெடிப்புச்சம்பவங்களில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட ஐவர் பலியாகியுள்ளனர்.

கராச்சி நகரில் கடந்தசெவ்வாயன்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையடுத்து இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

பாகிஸ்தானில் பிரதான இரு எதிர்க்கட்சிகளே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன:

இக்குண்டு வெடிப்பிற்கு பாகிஸ்தான் அரசே காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன;

(உ-9)

## செயலமர்வு

தென்மராட்சி வலயப்பாடசாலைகளின் ஆரம்ப ஆசிரியர்களுக்கான ஆசிரிய ஆலோசக செயலமர்வு இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தென்மராட்சி வலயக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது;

[உ-41]

செயற்பால செய்யா(து) இவறியான் செல்வம் உயற் பால(து) அன்றிக் கெடும்.

குறள்

## வலம்புரி

### அனுராவின் அவலம்

ஒரு புறம் வேடன் மறு புறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் என்ற பாடலே சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவை எண்ணும் போது நினைவுக்கு வருகிறது.

ஒரு புறத்தில் தான் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி, மறுபுறத்தில் உடன் பிறப்பின் பொது ஜன ஐக்கிய முன்னணி. இந் நிலையில் சபாநாயகர் அனுரா ஓர் இக்கட்டான சூழ் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார். தான் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றியடையச் செய்வதா, அல்லது தனது சகோதரியின் ஆட்சியை எப்படியாவது தக்கவைப்பதா என்பதில் அனுரா எந்தப்பக்கம் சார்வார் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இரண்டு பிரதமர்களின் மகனான அனுரா பழுத்த அரசியல் வாதி, அனுபவமிக்கவர். ஆனால் தனது குடும்பத்திலிருந்து பிரிந்து தனது தாயின் குடியுரிமையையே பறித்து படுத்தாத பாடுபடுத்திய ஐக்கிய தேசியக் கட்சியில் போய் இணைந்து கொண்டது அவர்வாழ்க்கையில் விட்ட பெரும் தவறு.

அத் தவறின் அறுவடையையே இப்போது அவர் சபாநாயகர் என்ற பெயரால்அனுபவித்துக்கொண்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியில அனுரா போய் இணைந்த போது தனது சகோதரியான ஜனாதிபதி சந்திரிகாவுடன் இருந்த உறவுக்கும் தற்போதுள்ள உறவுக்கும் பலத்த வேறுபாடுண்டு.

அன்று தனது சகோதரியுடன் பெரும் பகை கொண்டிருந்த அனுரா இப்போது அப்படியல்ல. தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா மரணமானதையடுத்து அவரின் மரணச் சடங்கில் அனுரா கலந்து கொண்டதும், ஜனாதிபதி சந்திரிகா சகோதரன் அனுராவை ஆரத்தழுவிய முத்தும் சகோதர பாசத்தைத் தூண்டிவிட்டது.

தந்தை, தாய் இல்லாத நிலையில், சகோதரி கணவனைப் பறிகொடுத்த நிலையில், தானோ தனிக் கட்டையாக இருக்கும் போது சகோதரிக்கு ஆதரவாக இருக்கவேண்டுமென்ற உணர்வு இப்போது அனுராவிடமெழுந்துள்ளது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியும் அனுரா மீது நம்பிக்கை கொண்டுள்ளது.

# அனுசரணையாளரை ஓரங்கட்டும் நாடகம்

# இனப்பிரச்சினைத் தீர்வில் இழுத்தடிப்பு ஆகுமா?

இலங்கையரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் பேச்சுக்களைத் தொடக்கி வைக்கும் அனுசரணையாளராக பொறுப்பேற்க சம்மதித்து, எரிக் சோல்ஹெய்ம் அவர்கள் கடந்த ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி வன்னி சென்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்ததுடன், தனது சமாதானப் பணிகளை வெளிப்படையாக ஆரம்பித்தார். அன்றிலிருந்து கடந்த வாரம்வரை அவர் ஒஸ்லோ-கொழும்பு - வன்னி - லண்டன் என்று மட்டுமன்றி புதுடில்லி, அமெரிக்கா என்றும் சுற்றித்திரிய நேரிட்டது இவ்வாறு விடாப்பிடியான முயற்சியில் கடந்த எட்டு மாதங்களாக ஈடுபட்டிருந்த அவர், இரகசியங்களைக் காப்பாற்றவில்லை; தனக்கென்று திட்டம் வகுத்துச் செயற்பட்டார்; பெருமளவு பேட்டிகளை பத்திரிகைகளுக்கும், இணையத்தளங்களுக்கும் வழங்கினார்; அவற்றின் போது நேரடிப் பேச்சுக்கள் நடைபெறுகையில் மட்டும் வெளிப்படுத்தக் கூடிய விடயங்களை ஏற்கனவே கசிய விட்டு விட்டார். இவ்வாறான செயல் நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் வரலாற்று ரீதியாக அனுசரித்த கொள்கைகளுக்கு முரணானவை. அமெரிக்கா சென்று காங்கிரஸ் அதிகாரிகளுக்கு சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் பற்றி விளக்கிக் கூறுவதற்கிருந்ததாக முன்கூட்டியே இலங்கையரசுக்குத் தெரிவித்திருக்கவில்லை. இலங்கையரசுக்கு அடிக்கடி அழுத்தம் கொடுக்கும்படி அமெரிக்க அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார் என்பன போன்ற பல சந்தேகங்களுக்கு உள்ளாகியுள்ளார். மொத்தத்தில் சோல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுக்கு சார்பாக நடந்து கொண்டிருக்கிறார் என்னும் சந்தேகங்களின் பேரில் இவரது போக்குகளை உன்னிப்பாக ஆராய்ந்த பின்னர் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் த்ரொப் ஜோன் ஜெக்லாண்ட் கொழும்புக்கு அழைக்கப்பட்டு இவரை ஓரங்கட்டி விடுமாறு கேட்கப்பட்டிருக்கிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

#### பக்கச் சார்பற்றவர்

இதேவேளை விடுதலைப் புலிகளின் சார்பில் இதுபற்றிக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அனுசரணையாளரை இலங்கையரசும், நோர்வேயும் இணைந்து எம்முடன் கலந்து பேசாமலும் விலக்கி வைத்தல் முறையற்றதும்வல்லாண்மையான செயலுமாகும். இதற்காக அவர்கள் திருப்திகரமான விளக்கத்தை முன்வைத்தல் வேண்டும். அவ்வாறில்லையேல் சோல்ஹெய்ம் விலக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ போவதில்லை சோல்ஹெய்ம் பக்கச் சார்பின்றி விசுவாசத்துடனும், திறமையுடனும் செயற்பட்டுவந்தவர் சோல்ஹெய்ம் மீது நாம் கொண்டிருந்த நம்பிக்கை காரணமாகவே எமது ஒத்துழைப்பை வழங்கியும், பங்குபற்றியும் வந்தோம். எமக்கு அவர்மீது நிறைந்த நம்பிக்கையுண்டு என்று புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். மேலும் சோல்ஹெய்ம் நேர்மையானவராக இருப்பதால சூழ்நிலைகளைத் திரித்துக்கூறி, புலிகளே சமாதானத்தைக் குழப்புகிறார்கள் என்று வெளிக் காட்டுவதில் அரசுக்குச் சிக்கலான நிலை இருக்கிறது. அதனால், 1985 இல் ஜீ பார்த்தசாரதியை அகற்றி விட்டு அவரிடத்தில் ரொமேஷ் பண்டாரி என்பவரை நியமிப்பதற்கு அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன முயற்சித்ததுபோன்ற முயற்சியில் அரசு இறங்கியிருக்கிறது என்றும் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுக்களை மேலான ஒரு மட்டத்திற்கு உயர்த்தி விடும் சாட்டில் அரசானது, செயற்திறனும், பக்கச்சார்பின்மையும் கொண்ட ஒருவரைத் தரமிறக்கி ஓரங்கட்ட முயற்சிக்கிறது என்று வன்னியிலிருந்து விடுக்கப்பட்டதாக ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.

#### புதியவர் நிலை

இதேவேளை சோல்ஹெய்மை ஓரங்கட்டும் திடீர் அவசரம் அரசுக்கு எப்படியேற்பட்டது? அதனைத் தோற்றுவித்த காரணிகள் யாவை? சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டிய அடுத்ததரப்புடன் ஆலோசனை கலக்காமல் ஏதேச்சாதிகாரத்தனமாக இவ்வாறு தீர்மானிக்கப்பட்டமை முறையானதா? இனிமேல் புதிதாக ஒருவர் தலை காட்டுவாரா? பழையவர் விட்ட இடத்திலிருந்து புதியவர் தொடர்வாரா? தான்சொந்தமான கணிப்புகளைச் செய்வதற்காக ஆரம்பத்திலிருந்து தொடங்குவாரா? பார்த்தசாரதி போலிருப்பாரா? ரொமேஷ் பண்டாரி போலிருப்பாரா? சோல்ஹெய்ம் இனி வேறு ஒருவரின் கீழ் தொடர்ந்து பணியாற்றுவாரா? என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன.

#### அமெரிக்கா அழுத்தம்

உண்மையில நடந்தவற்றைப் பார்த்தால், மே 10 ஆம் திகதி சோல்ஹெய்மின் பணிகள் இலங்கையரசினால் பாராட்டப்பட்டுள்ளன. இதிலிருந்து ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் ஓரங்கட்டுமளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது. இந்தக் கால இடைவெளியிலேயே மனமாற்றம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இக்காலப்பகுதியில் சோல்ஹெய்ம் இலங்கை வந்து கொழும்பிலும் வன்னியிலும் பேச்சுக்களை நடத்திய பின் அமெரிக்கா சென்று சமாதான முயற்சிகள் பற்றி விளக்கியிருந்தார். இதில் இலங்கையரசுக்கு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அழுத்தம் கொடுக்குமாறு கேட்டுக் கொண்ட விடயமே முக்கியமானதாகும். இடைவிடாத சமாதான முயற்சிகளில் உறுதிப்பாட்டுடன் தாம் ஈடுபட்டு வருவதாக முழு உலகுக்குமே அரசாங்கம் எடுத்துக்காட்டி வரும் வேளையில் சோல்ஹெய்மின் கோரிக்கை அரசாங்கத்தை அம்பலப்படுத்தியுள்ளதாகவே எவரும் கருதுவர். அதுமட்டுமல்ல இதுவரையும் முக்கியமான அயல் நாடு என்பதால் புதுடில்லிக்கு மட்டுமே சென்று சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி எடுத்துரைத்து வந்த சம்பிரதாயங்கள் இனிமேல் அமெரிக்காவுக்கும் நீடிக்கப்பட்டுவிடுமோ என்னும் அச்சத்தைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம் என்ற நிலையிலும், தனக்கென்று திட்டம் வகுத்துச் செயற்படும் போக்கினை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்றும் அரசு கருதியிருக்கலாம். அமெரிக்கா அண்மைக் காலங்களில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரங்களில அதிக அக்கறை காட்டி வரும் நிலையும் அவதானிக்கத்தக்கது. ஆரம்பத்தில் பேச்சுக்கள் நடத்த இலங்கை வந்த சோல்ஹெய்ம் பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றி இந்தியத் தூதுவருக்கும எடுத்து விளக்குவது சம்பிரதாயமாக இருந்தது. பிற்பகுதியில் ஆர்வமுள்ள வேறு நாடுகளின் ராஜதந்திரிகளுக்கும் விரிவாகியதும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு முடிவு செய்யும் ஒன்றாகி விடுவதை இலங்கையரசு மட்டுமல்ல இந்திய அரசும் விரும்பாது என்பதே பலரதும அபிப்பிராயமாகும்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் விடயங்கள் எவ்வாறு அமையலாம் என்பதே அக்கறைக்குரிய விடயமாகும். இனிமேல் நடக்கக் கூடிய பேச்சுக்கள் இரகசியமாக வைக்கப்பட்டு காலத்திற்குக்காலம் கூட்டு அறிக்கைகளாக இரு அரசுகளாலும் (நோர்வே-இலங்கை) வெளியிடப்படவிருப்பதாகசெய்திகள் தெரிவிக்கின்றன. நோர்வே அரசுக்கும் இலங்கையரசுக்குமிடையே பேச்சுக்கள் நடத்தப்பட்டு ஒரு கூட்டறிக்கையும் நோர்வே அனுசரணையாளருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே பேச்சுக்கள் நடத்தப்பட்டு இன்னுமொரு கூட்டறிக்கையும் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கலாமா? அல்லது மூன்று தரப்பினாலும் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்படுமா? என்பது இனிமேல்தான் தெரியவரும் இலங்கையில் அரசு மாறும் நிலை தோன்றினால் இன விவகாரங்களில் அரசின் நிலைப்பாட்டில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பன மனதைத் தூண்டும் ஏனைய விடயங்களாகும்.

- யூகி -

(இன்று புளியங்கூடல் செருத்தனை மகா மாரி அம்மன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது)

### தேரினில் வரும் காட்சி

'மாநிலம் போற்றும் மகாமாரியே
கூடல் ஊரினில் குடியிருப்பவளே
பாடி ஆடிடும்பக்தர்களுக்குபரகதிதந்திடுவாய்
நாடி உன்பதம் தேடும் தீவதில்
திரிபுரசுந்தரி மகாமாரியென
திக்கெலாம் அருள்புரிந்திடுவாய்
தேரதில் வந்திடும் உன் திருக்காட்சியை
சிவனருட் செல்வர்க்குக் காட்டிடுவாய்'

வேலணை பாலா
(அங்.இல.47)

## இல. வங்கி ஊழியர்களுக்கு பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும்

இலங்கை வங்கி ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் காலை 8.30 முதல் மாலை 4:30 வரை நடைபெறவுள்ளது

இந் நிகழ்வினை வடபிராந்திய பொது முகாமையாளர் திருமதி ஐ. பி ரட்ணதுரை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பயிற்சி நெறியினை வழங்குவதற்காக கொழும்பிலிருந்து பிரதிப் பொதுமுகாமையாளர் பி. ஏ சில்லணாண்டோ உதவிப்பொதுமுகாமையாளர் எஸ். கே. சியநாதன், உதவிப் பொது முகாமையாளர் ஜே. ராஜேந்திரன் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எம். ஆர். கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

அடிப்படை தத்துவங்கள், கடன் வழங்குதல், வங்கியின் மறுசீரமைப்பு. வெளிநாட்டு உண்டியல்கள் வெளிநாட்டுக் கணக்கு ஆகியவிடயங்கள் குறித்து மேற்படி பயிற்சிப் பட்டறையில் ஆராயப்படும்.

[உ-10]

## நல்லூர் கோட்ட ஆங்கிலதினப் போட்டிகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 14, 15, ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நல்லூர் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இம் மாதம் 18,19 ம் திகதிகளில் யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கோட்ட உதவிக்கலவிப் பணிப்பாளர்எஸ்.காங்கேயன் தெரிவித்தார்.

18 ஆம் திகதி எழுத்துமூலப் போட்டிகள் நடை பெறவுள்ளதால், பார்த்தெழுதல் போட்டியில் பங்குபற்றுவோர் ஆண்டு 3 மாணவர்கள் ஆண்டு 4 ஆங்கிலப் புத்தகத்தையும்.

ஆண்டு12,13 மாணவர்கள் ஆண்டு 11 ஆங்கிலப்புத்தகத்தையுமஏனையவகுப்பு மாணவர்கள் தத்தமதுவகுப்பு ஆங்கிலப் புத்தகங்களையும் கொண்டு வர வேண்டும் எனவும்.

வாய்மூலப் போட்டிகள் அனைத்தும இரண்டாம் நாள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(உ-6

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு நெதர்லாந்து ஆதரவு வழங்கும்

### பத்திரிகையாளர் சங்கத்திடம் தூதுக்குழு தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே அரசின் அனைத்து முயற்சிக்கும் நெதர்லாந்து அரசு ஆதரவு அளிக்கும் என நெதர்லாந்து உயர்மட்டத் தூதுக்குழுவைச்சேர்ந்த முதலாவது செயலாளர் அனக்கி எம். ஸ்வெற்றரும் இரண்டாவது செயலாளர் டெறின் ஈவன் நொறின் ஆகிய இருவரும் வடஇலங்கைப் பத்திரிகையாளருடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளனர்.

வடஇலங்கைப் பத்திரிகையாளருடனான இச்சந்திப்பு நேற்று யு என் டி,பி. அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப செயலாளரும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவருமான இராதுரை ரத்தினமும் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பின் போது பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு நெதர்லாந்துத் தூதுவர் பதில் அளிக்கையில்

யாழ் குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் அறிந்துகொள்வதற்காகவே யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தோம்.

யாழ்ப்பாணத்து மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து பலர் எம்மிடம் கூறியுள்ளனர்.

இந்நிலையில் யுத்த சூழ்நிலை மாறி சமாதான சூழ்நிலை மலர்வதையே நெதர்லாந்து அரசு விரும்புகிறது.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு எம்மாலான உதவிகளை நாம் செய்வோம் என்றும் அவர்கள் பதிலளித்தனர். [வ]

## இன்று தேர்

புளியங்கூடல் செருந்தனை பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. [உ-75]

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களுக்கானகலந்துரையாடல் ஒன்று 512 ஆவது படையணியின் அலுவலகத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக கலந்துரையாடப்படவிருப்பதால் உரிய ஆவணங்களை கொண்டு வருமாறும் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலர் ந.வேதநாயகன் அறிவித்துள்ளார். [வ-6]


**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

அர்ஜுன், அபிதா பிரகாஷ்ராஜ் நடித்த

**வானவில்**

தினசரி [ரீல்ஸ்]

11-00, 2-30 [பு. நே]

(3222)


# அமைச்சர் ஹேரத் மீது நம்பிக்கையில்லாதீர்மானம்

## சபாநாயகர் அனுமதி

(கொழும்பு)

கிராமியக்கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மகிபாலஹேரத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்க சபாநாயகர் அனுராபண்டாநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த மே மாதம் 2ந்திகதி மாவனல்லயில் இடம் பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்துக்குப் பின்னணியில் செயற்பட்டவர் அமைச்சர் ஹேரத் தென குற்றம் சாட்டப்பட்டு அவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பிரேரணையை ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் ஜே. வி. பி., தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ மற்றும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டாக சமர்ப்பித்துள்ளன.

மேற்படி பிரேரணையை விவாதிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் பிரேரணை திகதி குறிப்பிடப்படாது இடம்பெற்றுள்ளது. இதனால் பாராளுமன்றம் கூடும் எந்தவொரு தினத்திலும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான இறுதிமுடிவை எதிர்வரும் 20ந்திகதிசபாநாயகர் வெளியிடுவாரென தெரிய வருகிறது. (இ

## தமிழீழ

செலவினம் இவ்வாண்டு 6 ஆயிரம் கோடிரூபாவாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் யுத்தத்திற்கு முடிவுகட்டி சமாதானத் தீர்வுகாண வேண்டும் என்று அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தின செய்தியாளர் மகாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். [வ[

## ஜனாதிபதி

கிடக்கைகளையும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகவும் பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் ஸ்திரமற்ற நிலை நீடிப்பதை நாம் விரும்பவில்லை. குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கவும் நாம் விரும்பவில்லை. ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினையை தீர்ப்பார்என்று நான்நம்புகிறேன் ஆனால்சிறுபான்மை மக்கள் மத்தியில் அந்நம்பிக்கை அற்றுப்போய்விட்டது என்று ஜனாதிபதியிடம்எடுத்துக்கூறியதுடன் இப்பேச்சின்போது அரசுக்கு எந்தவிதமான உறுதிமொழியும் வழங்கவில்லை என்றும் அமைச்சர் விளக்கம் தெரிவித்தார்.

இதேவேளைஜனாதிபதி சந்திரிகா அமைச்சர்ரவூப்ஹக்கீமிடம் கல்முனைநகரசபையை மாநகரசபையாக மாற்றியுள்ளதாகவும் இதேபோல் படிப்படியாக ஏனையகோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்றும் கூறியதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# தென்மராட்சியில் மேலும் 4கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர அனுமதி

தென்மராட்சியில் மேலும் 4கிராமஅலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு சிவில்நிர்வாகப் பகுதியினரால் நேற்றுஅனுமதி வழங்கப்பட்டது.

மட்டுவில்தெற்கு, மட்டுவில் வடக்கு,மட்டுவில்கிழக்கு சந்திரபுரம் ஆகியபகுதிகளை சேர்ந்த ஜே 312, ஜே 313 ஜே 314, ஜே. 315 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த600இற்கும்அதிகமான குடும்பங்களுக்கு இவ்அனுமதி வழங்கப்பட்டது. (உ-77)

## கப்பல் புறப்பட்டது

சிற்றிஒப்றிங்கே பயணிகளை ஏற்றிக் கொண்டு நேற்றுதிருமலை புறப்பட்டது

## வடக்கு

எதிர்வரும் ஆறுமாதத்துக்கு வடக்கு-கிழக்கு வைத்தியர்களுக்கும் விசேட மேலதிகக் கொடுப்பனவை வழங்குதல் மற்றும் விசேடமேலதிகக் கொடுப்பனவை இவ்வருடத்துடன் நிறுத்திவிட்டு, புதிய திட்டமொன்றை தயாரித்தல் ஆகிய விடயங்கள் குறித்து வைத்தியர்கள் குழுவும் சுகாதார அமைச்சரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்

இவ்விணக்கப்பாட்டையடுத்து ஐந்துநாட்களாக இடம்பெற்ற வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நேற்று மாலை 4.00 மணி முதல் வைத்தியர்கள் தமது வழமையான கடமைக்குதிரும்பியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு வைத்தியர் குழுவின் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சருடன் நடத்திய சந்திப்பின்போது வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் கணேசமூர்த்தி, பாராளுமன்ற உறுப்பினர்கள்எஸ், தவராஜா கே வி குகேந்திரன் [ஜெகன்] ஆகியோரும் கலந்து கொண்டனர். [இ]

## தென்மராட்சி

சுவரொட்டிகள்: கைதடி நுணாவில் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளதாக அங்கு சென்று வரும் பிரதேச வாசிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-43]

## திருமலை

குண்டுவெடிப்பையடுத்து நகரில் பெரும் பதற்றம் நிலவியது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத் தப்பட்டதுடன் நகரில் சோதனை நடவடிக்கைகளும் தேடுதல்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. (08-இ)

## பேச்சுவார்த்தை

லைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ், சிங்கள, முஸ்லிம் இன மக்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மதங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது அவசியமாகும்.

இதற்கான முயற்சிகளில் அரசாங்கம்தற்போது ஈடுபட்டுள்ளது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் விவகாரத்தில் கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநயயக்காவின் இந்த உரை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர் (வ

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் தெய்வானைப்பிள்ளை

மாவிட்டபுரத்தை சொந்த இடமாகவும் நீர்வேலி வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தெய்வானைப்பிள்ளை 15-06 2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், கனகம்மா அரியமலர், அன்னலெட்சுமி, சேகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ் சென்றவர்களான வன்னித்தம்பி, வள்ளிப்பிள்ளை, சங்கப்பிள்ளை, செல்லம்மா மற்றும் கதிரிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-06-2001 இன்று பகல்1மணியளவில்நீர்வேலியிலுள்ள அவரதுஇல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாசுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

வ. வைரவப்பிள்ளை J. P

(மருமகன்)

சின்னம்மன் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(கி-2114)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர அலுவலர் திரு. சோ. முத்துராசா அவர்களின் அன்புத்தாயார்,

**திருமதி சோமசுந்தரம் இலட்சுமிப்பிள்ளை**

அவர்கள் 13-01-2001 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கி நிற்கும்**
யாழ்ப்பாணம்
ஆட்பதிவுத்திணைக்கள
உத்தியோகத்தர்கள்.

(3257)


எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....



**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2003]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.